உ

சிவமயம்



மல்லாகம் பழம்பதி தேவஸ்தான ஆதீன பரம்பரைக்குரு

# சிவஸ்ரீ இரத்தினசாமிக் குருக்கள் மனைவி

# பார்வதி அம்மா

அவர்களின்

# ஞாபகார்த்த வெளியீடு

**29-01-2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மல்லாகம் பழம்பதி தேவஸ்தான ஆதின பரம்பரை குரு

சிவஸ்ரீ இரத்தினசாமிக் குருக்கள் மனைவி

பார்வதி அம்மா அவர்களின்

**ஞாபகார்த்த வெளியீடு**

**29.01.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் குலவிளக்கு பாசத்தால் உயர்ந்து நின்று அன்போடு எமை வளர்த்து நல்ல நிலைக்கு உயர்த்திய எமது அன்புத் தெய்வம்

**அமரர்**

**சிவஸ்ரீ. இரத்தினசாமிக் குருக்கள்**

**பார்வதி அம்மா**

நினைவாக இம் மலரினைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



**தோற்றம்**
**14.01.1947**

**மறைவு**
**20.01.2023**

## அமரர், ஸ்ரீமதி
# இரத்தினசாமிக்குருக்கள் பார்வதி அம்மா

### திதி வெண்பா

மல்லாகம் பழம்பதியின் மனைவிளங்க வந்ததிரு
எல்லாரும் போற்றிடும் நம் பார்வதியம்மாள் – சொல்லாமல்
சென்ற தினம் சுபகிருது ஆண்டினிலே தை மாதம்
ஒன்றிவிடும் அபரபட்சச் சதுர்த்தசியாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவஸ்ரீ இரத்தினசாமிக் குருக்கள் பார்வதி அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ இரத்தினசாமிக் குருக்கள் பார்வதி அம்மா



இ.பிரபாகரக்குருக்கள் (பாபு) ஹேமலதா குடும்பம் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராஜேஷ்வரி (அனுஷா) வைத்தீஸ்வரசர்மா (மூத்தமகள்) குடும்பம்



இராஜலக்ஷ்மி (ராஜி) சந்திரமோகன்சர்மா (இளைய மகள்) குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

தோடு உடைய செவியன் விடை ஏறி
ஓர் தூ வெண் மதிசூடிக்
காடு உடைய சுடலைப் பொடி பூசி
என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரான் முனைநாள்
பணிந்து ஏத்த அருள்செய்த
பீடு உடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறைவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாகம் பழம்பதி தேவஸ்தான ஆதின பரம்பரை குரு சிவஸ்ரீ. இரத்தினசாமிக் குருக்கள் மனைவி பார்வதி அம்மாவின்

# வாழ்க்கை வரலாறு

இந்திய கேரள மாநிலம் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த வெங்கடராமையர் சீதாலட்சுமி அம்பாளின் மூன்றாவது புத்திரியாக 1947.01.14 அன்று இலங்கை மாத்தறையில் வந்துதித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபை கணக்கியலாளர் வெங்கட்ராமையர் சீதாலட்சுமி மணவாழ்க்கையின் பயனாக மூன்று ஆண்பிள்ளைகளையும், நான்கு பெண் பிள்ளைகளில் இரண்டாவது மகளாக அவதரித்தார். ஆரம்பக் கல்வியை யாழ் நாவலர் பாடசாலையிலும் உயர்தரக் கல்வியை உரும்பிராய் இந்துக்கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். இசை, நடனம் என்பவற்றிலும் ஆளுமை பெற்றார்.

பருவம் எய்தியதும் பருவத்தே பயிர்செய் என்ற கருத்திற்கு இணங்க மல்லாகம் பழம்பதி தேவஸ்தான ஆதினகுரு முத்தையாக் குருக்கள் இராஜராஜேஸ்வரி அம்மாவின் வாழ்க்கைப் பயனாக வந்துதித்த இரண்டாவது மகன் இரத்தினசாமிக் குருக்களை 1971ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி மணம் செய்து மணவாழ்க்கைப் பயணத்தை தொடங்கினார்.

அதன் பயனாக பிரபாகரசர்மா (பாபு - அவுஸ்ரேலியா) இராஜேஸ்வரி, (அனுஷா - டென்மார்க்) இராஜலட்சுமி (ராஜி - U.K) ஆகிய மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தார். மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளையும் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் கல்வி கற்கச் செய்தார்.

அவரது கணவரின் குருத்துவத் தொழிலை பயில வேணும் என எண்ணி அவரது ஒரே மகன் பாபுவை இந்தியா பிள்ளையார் பட்டியில் வேத அத்யயனம் கற்பித்தார். அதன் பேறாக அவரது குருத்துவப் பணி இலங்கையிலும், வெளிநாடுகளிலும் மேம்பட்டதை பார்த்து மனம் நிறைவடைந்தார்.

பிள்ளைகளின் மணவாழ்க்கை வயதைக் கண்டு அவரது மகனிற்கு கொக்குவிலைச் சேர்ந்த இரத்தின சபாபதிக் குருக்கள் - சம்பூர்ணவல்லி தம்பதிகளின் ஐந்தாவது மகள் ஹேமலதாவையும், மூத்த மகளான அனுஷாவிற்கு புளியங்கூடலைச் சேர்ந்த ராமகிருஷ்ண ஐயர் ருக்மணி அம்மாவின் ஏக புத்திரன் வைத்தீஸ்வர சர்மாவையும் இரண்டாவது மகள் ராஜிக்கு தாவடி வேதவிநாயகர் ஆலய பரம்பரைகுரு முத்துலிங்க சர்மா ஜெகதாம்பாள் தம்பதிகளின் இரண்டாவது மகன் சந்திர மோகன்சர்மாவையும் மணமுடித்து வைத்தனர். அதன் பேறாக தேஜஸ்வினி, தேஜாகர்ஷ சர்மா, ரமணன், ரம்யா, ரம்யன், ரமீனா, கிருஷாந்தன், நிஷாந்தன், சுஷாந்தன், சங்கீதா ஆகியோரை பேரப்பிள்ளைகளாக கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கண்டார்.

அவரது வாழ்க்கைப் பயணத்தை கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயச் சூழலில் கழிக்க நேர்ந்தது. அக்காலத்தில் அவ் ஆலயத்தில் பிரதம குருவாக இருந்த மயிலணியைச் சேர்ந்த சி.குஞ்சிதபாதக் குருக்களிடம் ஜோதிஷம் பயின்று அதை ஒரு தொண்டாக ஆற்றி வந்தார். அத்துடன் தமிழிலும் புலமை பெற்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் தமிழ் பண்டிதர் பட்டத்தையும் பெற்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சொற் பொழிவுகள் பல ஆற்றி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக் காலத்தில் தனது வாழ்விடமாகக் கொண்ட மல்லாகம் பழம்பதியில் கழிக்க ஆசைப்பட்டு 2003ல் நிரந்தரமாக தனது இல்லத்தில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கையில் சுகயீனம் காரணமாக கடந்த 2023ம் ஜனவரி 9ம் திகதி தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 2023 ஜனவரி 20ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு பழம்பதியான் பாதாரவிந்தம் சென்றார்.

**குடும்பத்தினர் சார்பாக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்தபோது நேரில் வந்தும், உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் தொலைபேசி ஊடாகவும், முகநூல், மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும், RIP BOOK ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், கண்ணீர் பதாதைகள், பத்திரிகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாற்றியவர்களுக்கும், உற்றார் உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அம்மா எங்களை விட்டுச் சென்ற கணம் முதல் இன்றுவரை தோளோடு தோள் நின்று இறுதிக் கிரிகைகளின் போது சகல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் மற்றும் இன்றைய வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும், இந்த நினைவு மலரை அச்சிட்டுத் தந்த கஜானந்த் அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**– மகன், மகள்மார்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச வ

தேவாரண்ய சிவாச்சாரியார் (ஸ்ரீ வேதராண்யேஸ்வர ஆலயகுரு வேதாரண்ய

சுப்பையாக் குருக்கள் (மல்லாகம் பழம் பிள்ளையார்)

ஞானாம்பாள்

முத்தையாக் குருக்கள் + இராஜராஜேஸ்வரி

மீனாட்சி ரா

நாகேந்திர சர்மா
+
ஞானாம்பாள்

சத்தியவாணி
நர்மதா
சனாதனசர்மா
சிவகாமி

ஜெகதாம்பிகை
+
சோமாஸ்கந்த சர்மா

சிவாகரசர்மா
வதனாம்பாள்

**இரத்தினசாமிக் குருக்கள்**

பிரபாகரசர்மா
+
ஹேமலதா

தேஜஸ்வினி
தேஜாகர்ஷசர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருட்சம்

பம்)

வெங்கட்ராமையர் + சீதாலட்சுமி

ராமநாதன் **பார்வதி அம்மா** ஸ்ரீநிவாசன் சுப்புலட்சுமி ஜானகி கிருஸ்ணஷ்வாமி

இராஜேஸ்வரி
+
வைத்தீஸ்வரசர்மா

ரமணன் + பிரசாந்தி
ரம்மியா + பாலமுரளி
ரம்யன்
ரமீனா

இராஜலட்சுமி
+
சந்திரமோகன் சர்மா

கிருஷாந்தன்
நிஷாந்தன்
சுஷாந்தன்
சங்கீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை நீ கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

**"இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமுமாகும்"**

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org